அனுபவ வைத்தியம்.

27.5.86.

ஏடு எண் : 255

பெயர் : அநுபவவைத்தியம்

பாடல் : உரைநடை

ஏடு எண்ணிக்கை : 20

அளவு : 22.7 x 3

வரி : 8

நிலை : முழுமை

குறிப்பு :

முடித்தேன் — 26.5.86

எல்லா நோய்களையும் வரும் முறைகளை
வந்துள்ளன. தனிக்கலம்

கிருஷ்ண
16/2/09

255. அநுபவவைத்தியம்

105.அ

மஞ்சகாமாலை சோகை பாண்டுவுக்கு

பட......

மிளகு பலம் !, வெள்ளைப்பூண்டு பலம் இ, கருசிலாங் கண்ணியிலை கூட கூட்டி அரைத்து புளியங்கொட்டை பிரமாணம் அந்தி சந்தி ரெண்டு வேளையும் அஞ்சு நாளைக்கு வெள்ளாட்டு பாலிலே குடுக்கவும் கடும் பத்தியம். உப்பு வறுத்து போடவும். பத்துநாள் தலை முழுகி கொள்ளிக்காரம் கூட்டவும்

ஆ

பாண்டுவுக்கு

நீர்முள்ளி, கண்டங்கத்திரி, சிறுவழுதிலைவேர், சித்திரைமூலம், மரு........ முக்கந்தாளிவேர், மூலகரணைவேர் சங்கம்வேர் நன்னாரிவேர் இது எல்லாம் பானையிலேப் போட்டு வெள்ளாட்டு கோமயம் வாத்து காய்ச்சி அஞ்சு நாள் ரெண்டு வேளையும் குடுக்கவும். கடும் பத்தியமிருக்கவும் குணமாகும். கைகண்டது.

பல்லு ஆடுதல் நோவு கண்டால்

ஒருபடி தண்ணியாலே
இலுப்பை கட்டை பொடிபண்ணி கொதிக்க வைத்து கொப்பளிக்கவும். கொட்டை பாக்கு சுட்டு பல்லு தேய்க்கவும் அரைப்படி தண்ணியிலே பனைவெல்லம் பலம் 5 போட்டு கொதிக்க வைத்து கொப்பளிக்கவும் பல்லு யாதிப்போகும்

106அ ## தேங்காய் எண்ணெய் பேதிக்கு

நேர்வாளம் பலம் 1
எருமைச் சாணியில் பசுவின் கோமயத்தில் பசுவின் பாலிலே சுத்தி பண்ணி அரைத்து தேங்காயெண்ணெய் படி-ஆ கொப்பரைக்காய் 2 உடைத்து பால் பிழிந்து வார்க்கவும் எண்ணெய் பதமாய் எரித்து அந்த எண்ணெயை நீராகாரத் தண்ணியில் துளி எண்ணெய் விட்டு பத்து துளிக்கு பத்துதரம் பேதியாகும் - பத்தியமில்லை.

நீர்க்கட்டுக்கு

பேயக்கருப்பனைச்சாறுபடி…
வெங்காரம் ஜீராகனிடை 1 சர்க்கரைபலம் 1, எலுமிச்சம் பழச்சாறுபடி -ட இதுவெல்லாம் கூட்டி குடிக்கவும். பசலைக் கீரையும் தயிரும் வெங்காயம் ஆறுபொழுது சாப்பிடவும்.

ஆ ## வாய்க்கு தைலம்.

எட்டிக்கொட்டை வேப்ப
யெண்ணெய், நெல்லிக்காய், கெந்தகம், அரைத்து திரியில்

நடஜா கொம்பாலே சுத்திக் கொண்டு வேப்பெண்ணை ஊட்டமல் மஞ்ஞெற்றுக்கும் அதையெடுத்து நடவவும் திருமண்ணு குப்பைமேனிச்சாறும் நீர்முள்ளியரையும் ஏதுமாச்சும் படிச்சாறு இப்படிக் கொட்டை இதுவெல்லாம் அரைத்து நடவவும். சிலையுட்டனையும் இரப்பேசம் ஆ கெட்டியாய் நம்பவும்.

மூலக்குட்டுக்கு மேகத்துக்கு லேகியம்

பச்சைநிறபடி-வ-, பனைவெல்லம் பலம் 2, சுடக்கொத்தான் பிலை யாது ரெண்டும் அம்மியிலரைத்து பனைவெல்லம் போட்டு பண்ணி 107அநெய் பலம் 2 ஆத்து லேகியமாய் கிண்டி அந்தி சந்தி சாப்பிடவும். அஞ்சுநாள் பத்தியம்.

வெள்ளை மாலைசூத்திர

வெள்ளை குங்கிலியம் வாங்கிவந்து நல்லெண்ணை விட்டு அரைத்து மறுபடி நல்ல சிலம் விட்டு அரைத்து சுத்தியாம் அதையெடுத்து ரணத்துக்கு போடுகிறது ஆறும் கைகண்டது.

கெந்தகஎண்ணம்

கெந்தகம் கொண்டுவந்து பசுவின் பாலிலே சுத்தி பண்ணிக் கொண்டு பாசாணக் கட்டி கொண்டு வந்து சட்டியாலே பாசாணத்தை நடஜா

அதிலே கெந்தகத்தைப் போட்டால் உருகும் மெழுகை
தின்னம் போலே செய்து தரு.......? பிறகு
அனலில் வச்சி மெழுகை வாங்கிப் போட்டு தருவாலே
ஆ உருகி.... கெந்தகம் வார்த்து ஆறவிட்டு மேல
மண்ணை நட்டுப் போட்டு தின்னத்திலே பசுவின்
பால் வார்த்து ஒரு நேரமும் சாப்பிடவும் சகலத்துக்கும்
நல்லது கைகண்டது.

பாசாண கட்டு விபரம்

முலையருளைக் கிழங்கு
கொண்டுவந்து அரைத்து அதுக்குள்ளே பாசாணத்தை
வைத்து மெழுகைச் சாணி அப்பி உலர்ந்த பிறகு
அதுக்கு புடம் போட்டு எடுக்கவும் கட்டும் சோதனை
கைகண்டது நெருப்பிலே போட்டால் புகையாது.

கெந்தகதின்னம்

அமரசிலை கெந்தகம் கொண்டு
குதிரை குளம்பு பாளைய [illegible]ட்டியால் தேய்த்து
கெந்தகம் போட்டு உருக்க உருகும் மெழுகு
தின்னம் போலே தரு தட்டி அதிலே வடவும்
தின்னத்திலே வெள்ளாட்டு பால் வார்த்து சாப்பிடவும்

108.அ ## ரசமணி பண்ணுகிறது.

ரசமணி - ரசம் வாங்கி வந்து
கருப்பு கரண்டியே வெளுமையாய் தேய்த்து
துரிசு பலம் 1, ரசம் பலம் 1, பொடி பண்ணி
கரண்டியில் போட்டு ரசத்தை விட வாட்டு குழந்த
சிலம் வாட்டு அடுப்பிலே வைத்து ஈருள்ளியை
பாந்திரம் சாத்தால் ரசம் மெழுகு போலேயாக
வரும் அதை உருண்டை பண்ணி புளியை
கொஞ்சமாய் தண்ணீர் விட்டு கரைத்து அதிலே
போட்டு வைக்கவும் மணி உருட்டுகிற போது
சீக்குச்சி கொண்டு துமறு பண்ணி குச்சியோடே
புளியில் போட்டு 30 நாட்களுக்கு ஊறப்போட்டு
எடுத்து தம்பாளியிலே தேய்ச்சு பிறகு பூசை
பண்ணி வேண்டியது.

தேவாங்கு ஔஷதம்

ஆ

தேவாங்கு மாச்சம் எலும்பும்
மை பண்ணித் தடவ வெட்டாது வலதுகால் எலும்பு
பொடி செய்து பெண்கள் மேல் போட மயங்குவார்கள்
அந்தப் பொடியை தலையில் போட்டுக்கொள்
மயக்கம் வரும். இடது கண்ணும் இடது நாக்கும்
பொடி செய்து நிலவரைத்து தடவப் போக காண
மாட்டார்கள்.

சாவல் கட்ட முறை

கவுதும்பை சாறு பிழிந்து சாவல் முகத்திலே தடவுகை எதிர வாசல் முன்னே கட்ட எதிரி சாவல் ஓடிப் போகும்.

109அ அரிவாதம் காலை வாத்தை

வெள்ளைப்பூண்டு நொச்சியும் உப்பு வசம்பு இது மூன்றும் வெருந்துணியில் கட்டி உரியில் கட்ட பெருச்சாளி எலி வராது.

மிக்க மருந்து

செவ்வகத்திப்பூ செவ்வலரிப்பூ செம்பருத்திப்பூ மாந்த மூறு அவரைப்பூ சிறுநீர் ஆர்த்து ஆறுநாள் ராத்திரிக்கு கிளிபாக்குப் போட்டு ஊற வைத்து தினமும் அர்த்தி தின்ன குடுக்கவும் சுருக்கு போட்டு ஊற வைத்து அருமையாவான் ஆண்திலைப்பலம் எருமை வெண்ணெயில் கூட்டி கிண்டித்து தடவ தொய்ச்சி போகும்

குவசன் குழை வேகாமல்

வேளைவேர் ஞாயத்து சிறுபீளை மாதவிகள் மஞ்சள் நூல் சுத்தி நெருப்பில் போட அறாமல்

ஆ சோறு வேகாமல்

செவ்வகத்தி வேர் வெட்டி வந்து அடுப்பில் புதைக்க சோறு வேகாது

உரனோதம்

மருதம்பூ செவ்வல்லிப்பூ வேப்பம்
பாசிறும் யாந்த மூறுபம் தண்ணிர் விட்டரைத்து உருண்டை
பண்ணி வேறு மென்ற போது ஒரு உருண்டை தண்ணி
யிலே கரைப்பி கையால் தடவிக் கொண்டு வேப்பலை
உருவதேலாம் அவ்தயிலை உருவ வேண்டாம் புளியிலை
உருவ குளவியாம் அவரையிலை புருவயாம் பாடம்
விளை இருந்து உருவ பெருமையாம் பாடம்

பாலச்சக்கரை பன்னி

விட்ட துத்திவேரை அரைத்து
பாலுடன் காய்ச்சு சக்கரையாம்.

நல்லெண்ணை நெய்யாக

110.அ

நல்லெண்ணை நெய்யாக
தோவரையை பொறு செய்து நல்லெண்ணையில் போட
நெய்யாம்

மோகத்துக்கு

திப்பிலி கிராம்பு பொடி செய்து
தேனில் மத்திச்சி ஒரு தேண்டுமணிப் பிரமாணம்
கின் வயத்தில் தடவி அனாவது பிறகு மூறு நாள்
சும்மா யிருந்து மூறுநாள் கடுகளவு தேனில்
மத்திச்சு அனுறு சாவவவு விடமாட்டாள்.

நிலக்கடம்புச் சாறும் நெய்யு மத்திச்சி மேலே தடவி
அனைந்து போக மான் தடவோம்

தேங்காயுதிர

மாடப்பாறையைச்சுடும் வேப்பெண்ணை
அரைத்து கையால் பூசிக் கொண்டு தென்ன மரத்தை தடவ
தேங்காய திரும்.

ஆந்தைவாகன

ஆ

மருகவண்ணறு திங்கள்கிழமை
நாள் தும்பைக்கு காப்புக்கட்டி செவ்வாய்கிழமை
நாள் பிடுங்கி வந்து வெள்ளைப்பூண்டு நகிகாளிச்
சாள் வாத்தரைத்து கையால் பூசிக் கொண்டு தென்ன
மரத்தை தட்ட தேங்காய திரும்.

ஆந்தைவாகனோதம்

ஆந்தை வலது கண்ணு
பிடுங்கி உலர்த்தி பொடி பண்ணி தூப தீபம் கொடுத்து
மேலே பூசிக் கொண்டு தனக்கு வேணுமென்ற
பேர்கள் முன்னே போய் நிற்கக அவள் தொடர்ந்துவருவாள்

காகரட்டான் வேர் வடக்கே போற
வேர் பிடுங்கி வந்து தன் நீர் வாத்தரைத்து இருவரை
பிரச்சி தடவ வசமாவாள்

III.அ

மூளையெரும்ப

வெழும்பும் நிலக்கடம்பு
சீரகமும் செம்பருத்தியும் வெல்லமும் அரைத்து மூன்று
நாள் குடுக்க மூளை எறும்பும்

விளக்கெரிய

தாமரைப்பூவை அரைத்து அத்திப்பாலூட்டி திரியாக்கி கொளுத்தி விளக்கில் தண்ணீர் வார்த்து விளக்கில் திரியைப் போட விளக்கெரியும்

மாந்து

தேத்தான் விரை அரைத்து நிக்கத்தில் வைத்துக் கொண்டு தயார் தொக்கை தண்ணீராகம். மாந்து வெள்ளம் தூண்டு போட தெளியும்

ஆ

சூனியம் செய்தவனுக்கு

வெள்ளிக் கிழமைக்கி கறுப்பு துண்டு மணிக்கி புது மொந்தை கொண்டு வந்து திரையாதி பால் வார்த்து பொங்கி தூப தீபம் குடுத்து காப்புக் கட்டினை ஞாயிற்றுக் கிழமைக்கி அதின் விரையே வாங்கி அதினுடைய ரசத்தில் எருநாள் ஊரப் போட்டு பகல் மாறு காயப் போட்டு தூப தீபம் குடுத்து வைத்துக் கொண்டு பில்லிக்காரன் பிடிக்க வேணுமே என்றால் முக்கோணம் மொளகி சுட்டு காய வைத்து ஒன்பது விரை போட்டு வைக்க வேரை வெடிக்கும் அவனும் வெடிப்பான்

112·அ

புண்ணுக்கு களிம்பு

உலசிகாந்தம் விராகனிடை
சூதம் விராகனிடை விராகனிடை நாபா விராகனிடை

மகோதகிரி ரோகத்தை। கெந்தகம் ரோகத்தை।
நெய் ஆட்டரைத்து களிம்பு பண்ணி புண்ணில் போட
ஆறும்.

நாக்கின் வரட்சிக்கு

திப்பிலி, சீரகம் நெல்லிமுள்ளி
மாதுளையோடு மயிலிறகு சர்க்கரை நெய் யாது வெல்லம்
வறுத்து பொடி பண்ணி நெயில் மத்திச்சி நாக்கில் தடவ
சலம் ஊறும் வரட்சி கண்டதும் நீங்கிப் போகும்

சங்கு பஸ்பம்

கல்தொம்பு கொண்டு வந்து
நாலு மூணு பலப்பாக பலந்து ஆரல் நீலம் நாக்கி
குப்பை மேனிச் சாத்தில் ஊறப் போட்டு ஒரு நாழிகை
எடுத்து எரு வரட்டி மேலே மேலே வைத்து அதின் மேல்
ஆ எரு வரட்டி கோழிப்புடம் போடவும் பறமானமாய்
அதை கலசத்தில் போட்டு தூளாக்கி சீமானில்
வைத்துக் கொண்டு நாலு பணவெடைக்கு வெண்ணையில்
மேகங்களுக்கு நெய்யில் புண் புரைகளுக்கு தேனில்
குடுக்கவும். பத்திய மில்லை.

கல்லுப்பு பஸ்பம்

கல்லுப்பு 1/2 படி கொண்டு வந்து
உந்தாமணிச் சாறு ஆட்டரைத்து உலர வைத்து
புடத்தில் போட பஸ்பமாகும். யிந்த கால் ரோகத்தை
சூதக வாய்வுக்கு சூலை வாய்வு பேதி தேனில்
அனுப்பானம் பண்ணி குடுக்கவும் தரும் பத்தியம்
யிந்த ரோகமெல்லாம் தீரும்.

113அ

சங்கு பஸ்பம்

சங்கு கொண்டு வந்து சில்ல
யுடைத்து எலுமிச்சம் பழச் சாத்திலுற வைத்து உப்பு
அரைத்து ரெண்டுவிரண்டு உரு வைத்து கையாந்
தகரைச் சாத்தில் வைத்து குழிப் புடத்திற் போட
பஸ்பமாகும். அந்த பஸ்பத்தை நெருஞ்சி சிறுபூளை
கையாந்தகரை சிறுகீரை நீர்முள்ளி யாது அஞ்சும்
குடிநாக்கி கஷாயம் பண்ணி அந்த கஷாயத்தில்
கால் விராகனிடை பஸ்பம் போட்டு குடிக்கவும்
7 நேரம் குடிக்கவும். உப்பில்லா மிளகு நீரு சாதம்
சாப்பிடவும்.

தீரும் வியாதி:

பாண்டு ரோகம், உப்புருதி, மாறுகை
மாறுகால் வீக்கம் நீர்க்கட்டு யாதுவெல்லாம் தீரும்.
ஏழு நாள் பாசிப்பயறு அரைத்து தண்ணீர் விடவும்.

ஆ

பவளபற்பம்

பவளம் கொண்டு வந்து
எலுமிச்சம் பழச்சாறு சாத்திலுற வைத்து கத்தாழை
-யைப் பிளந்து உள்ளே வைத்து சீலைமண் செய்து
புடம் போட பஸ்பமாகும். அந்த பஸ்பம் கால்
விராகனிடை தேனில் அரை மண்டலம் கொள்ளவும்

தீரும் வியாதி:

வரட்சி மந்தாரகாசம் யானை யருமல்
யாது எல்லாம் தீரும். பத்தியமில்லை.

114-அ

தாளக பஸ்பம்

தாளகம் வராகனெடை 10

கொண்டுவந்து சிறுகொள்ளுஞ்சி அரைச்சு 8 வசம்
புடம்போட்டு பஸ்பமமாம். யிந்த பஸ்பம் கால்
வராகனெடை பசுவின் நெய்யில் கொள்ளவும்
தீரும் வியாதி:
சுரம் வாய்வு நீராமிவு நீர்கட்டு
நீர்சுருக்கு கருப்பு இதுயெல்லாம் தீரும். பத்தியமில்லை.

தாளக பஸ்பம்

தாளகம் வராகனெடை 10

வாங்கிவந்து கோழிமுட்டை ஒரு நல்ல பொடி
பண்ணி மேலப்படி தாளகமும் உப்போட்டு
அந்த சலம் விட்டு மைபோலே அரைச்சு வில்லை
தட்டி காயப்போட்டு புடம் போட பஸ்பமாகும்
முன் சொன்ன வியாதிகளுக்கு குடுக்கவும்

ரச பஸ்பம்

ரசம் வராகனெடை 10 வாங்கி
வந்து வெப்பாலை பால் விட்டு அரைத்து வில்லைதட்டி
உலர வைத்து புடம் போட பஸ்பமாம். அந்த
பஸ்பம் சூலை கிரந்தி பரங்கிப்புண் மேகம்
ஆ கைகால் பிடிப்பு இதுயெல்லாத்துக்கும். பனைவெல்லத்தில்
சாப்பிடவும் யிந்த வியாதியெல்லாந் தீரும். உப்பு புளி
தவிர்க்கவும்.

உப்பு பஸ்பம்

கல்லுப்பு அரைப்படி கொண்டு வந்து முருங்கையிலைச் சார் அட்டரைத்து ஓட்டில் வைத்து உலரவைத்து முளப்புடம் போடவும் உப்பு கட்டும். இந்த உப்பு வராகனிடை வ தேனில் குடுக்கவும்.

தீரும் வியாதி:

வாய்வு வயத்துவலி, சுரம் வயற்பேதி கொண்டை இதுவெல்லாம் தீரும். இச்சாபத்தியம்

அரப்பொடி பஸ்பம்

அரப்பொடி வராகனிடை 10 வாங்கி வந்து வேலிப்பருத்திச் சார் வராகனிடை 10 அரைத்து வில்லை தட்டி உலர வைத்து முளபுடம் போடவும் பஸ்பமாகும்

தீரும் வியாதி:

//5அ சூலைவாய்வு, சீதவாய்வு பாரிச வாய்வு தீரும். அனுப்பானம் தேனில் சாப்பிடவும்

சலபாசாண கட்டு

சலபாசாணம் வராகனிடை 10 கொண்டுவந்து கோழிமுட்டை மூணு மஞ்சள் கரு

சட்டியில் விட்டு அடுப்பில் வைத்து எரித்து தயிலமான
உடனே எட்டிக்காய் கொண்டு வந்து பாதி அரைத்து
வாரதண்ணி உள்ளே பாசாணம் வைத்து முட்டை
தயிலம் விட்டு மூர சீலை மண் செய்து ஒரு சேர் உமி
மேலும் கீழும் வைத்து புடம் போடவும். கட்டிப்
போகும். இதுக்கு அனுப்பானம் வெந்தையம்
அரைத்து தண்ணியில் கலக்கி விழ கட்டி பாசாண
ஆ கட்டினை பத்து பணெடை குடுக்கவும்
தீரும் வியாதி :

பாண்டு சோகை காமாலை சுரம்
இது எல்லாம் தீரும் புளி தள்ளவும்

அரைமொழபலபம்

அரைமொழபலம்!, கொண்டு
வந்து பொன்னாங்கண்ணிச் சார் விட்டரைத்து ஒன்பது
புடம் போடவும் சின்புடம் போல் போடவும் செந்தூர
மாகும் இந்த செந்தூரம் விராகனிடை பசுவின்
நெய்யில் குடுக்க தீரும்
தீரும் வியாதி !:

காமாலை வீக்கம் பெருவயறு பாண்ட
ரோகம் இது எல்லாம் தீரும். பச்சாபத்தியம்.

116-அ பதினெட்டுசன்னிக்கு தயிலம்

கோழிமுட்டை 30 கொண்டு
அவித்து வேக வைத்து மஞ்சள் கரு எடுத்து தயிலமிறக்கி

15

சிறுங்கைப் பட்டை சித்திர மூலவேர் வேளைவேர்
அமுக்கிராவேர்ப் பட்டை மாவிலங்கப் பட்டை
நொச்சிவேர் யிது வெல்லாம் அரைத்துக் கொண்டு
சிட்டியால் வேப்பெண்ணை படி இ ஆட்டு கோழி
முட்டை தயிலமும் ஆட்டு யிந்த மருந்து சாந்தும்
கூடப் போட்டு எரித்து தயிலம் வடித்துக் கொண்டு
ஆ அந்திப்பிறை மேகத்துக்கும் சிரங்குக்கும் ரோகமெல்லாம்
தீர்ந்து மேல்படி தயிலம் உள்ளுக்கு குடுக்கவும்
பிச்சா பத்தியம் சகல சன்னியுந் தீரும்

பிள்ளைகளுக்கு மாந்த எண்ணை.

ஆலக்கெண்ணை படி 1,

பிள்ளைவங்காயச் சாறு படி உ, வெந்தயம் படி வ
அகத்திச் சார் படி வ, வேப்பங் கொழுந்து ஒரு பிடி
நாவல் கொழுந்து ஒரு பிடி அதிஞ்சிக் கொழுந்து
ஒரு பிடி மாதளம் கொழுந்து ஒரு பிடி கருகமல்லி
ஒரு பிடி வேலிப்பருத்திச் சார் படி வ, பாகலிலைச்சார்
117 அ படி வ மிளகு தக்காளிச் சார் படி வ நொச்சிக்
கொழுந்து ஒரு பிடி இது வெல்லாம் பிழிந்து சாறெடுத்து
எண்ணையில் ஆட்டு காச்சி மெழுகு பதத்தில்
வடித்து குடுக்க தீரும்.

தீரும் வியாதி:

சொறுகு மாந்தம் குடல் மாந்தம் சிறு
குடல் மாந்தம் பொருமல் எப்பேறப்பட்டது மாந்தமும்
தீரும். பத்தியம் உப்பு புளி புகையிலை தள்ளவும்.

மண்டையடிக்குத்தயலம்

வேப்பெண்ணைபடி ।

ஆதண்டைச்சாறுபடி।, குண்டுமணிச்சார்படி। ... யானை
தய்யானதகரைச் சார்படி।, வேப்பயிலைச்சாறுபடி।,
சார்படி ..., பொன்னாங்கண்ணிச்சார்படி। இரு
தலைப் சூண்டு பலம் 2 அசம்பு பலம் 2 இதுயெல்லாம்
ஆ சேர்த்து தயலமாக்கி மிளகு பதமாய் வடித்துக் கொண்டு
அந்த தயலம் தலைக்கி தேய்த்துக் கொண்டு அரை நிறைய
அதைப் போட்டு கொப்பளிக்கவும் காச்சியாலையும்
வெலுங்காயத்தும் நாக்கி நசியம் அடைவும் மண்டையடி
குடைச்சல் பினசம் இருதலைவலி இதுயெல்லாம் தீரும்
சாயந்திரம் சீயக்காய் தேய்ச்சி தலைமுழுகவும்
இப்படி அரைமண்டலம் முழுகி வரவும்

ஆ

சிவதை சூரணம்

சிவதைவேர் பலம் 2।

கொண்டு வந்து பாலூற்றி அவித்து காயப் போட்டு
இடித்து சூரணம் பண்ணிக் கொண்டு யிதுக்கு சடைச்
11சுஅ சரக்கு கோரைக்கிழங்கு பலம் ।, வாய்விளங்கம்
பலம் । சுக்கு பலம் ।, திப்பிலிபலம் । மிளகுபலம் ।
லவங்கபத்திரி பலம் । ஏலம் பலம் । கடுக்காய்த்தோல்
பலம் । தானிக்காய்த்தோல் பலம் । சாதிக்காய்பலம் ।
நெல்லிமுள்ளி பலம் । கொத்தமல்லிபலம் । இது

வெல்லம் சேர்த்து அரைத்து சூரணம் பண்ணி இவைகளை
சூரணத்திலே சேர்த்து பெறபாதி சர்க்கரை கலந்து
நேரத்துக்கு வெருகடி சூரணம் சாப்பிடவும்.

தீரும் வியாதி :

கைகால் வீக்கம், கால் குடைச்சல்
இடுப்பு வலி, நீர்க்கட்டு குளப்புண் அரைகள் சூலை வாய்வு
கோதரம் உப்பசம் இளை இருமல் சயம் பெருவயறு
ஆசப்பேறப்பட்ட வியாதியும் தீரும். இவைகளை வேர
சட்டியில் பால் வார்த்து மேலே வாய்கட்டி மேல் இவைகளை
வேர் வைத்து புகை போகாமல் சட்டி மூடி அவித்து
உலங்கவும்.

வெள்ளெழுத்துக்கு

மண்டையோடு கொண்டுவந்து
பொடி பண்ணி கையாந்தகரைச் சாறு வார்த்து அரைத்து
தயிர் செய்து முலைப்பாலிலுரைத்து கண்ணிலிடவும்
காச்சல் வெள்ளெழுத்து யாது மாறும்.

எல்லாம் வாய்வுக்கு உருண்டை

நேர்வாளம் சுத்தி செய்தது
பலம் 3 அந்துப்பு பலம் 3 சுக்கு பலம் 3 மிளகு பலம் 3
எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து சுண்டைக்காய்
பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி ஒரு
119-அ சிரங்கை வெந்நீரில் ஒரு உருண்டை இடவும் பேதியாம்
வெந்நீர் குடிக்கவும் மிகுதியானால் குளிர்ந்த தண்ணீர்
குளித்துப் போட்டு மலகு தீரும் முருங்கை கீரையும்
சாப்பிடவும்.

18

இஞ்சிகுளம்பு

இஞ்சிச்சாறு பலம் 8, சர்க்கரை பலம் 10, கொமட்டி மாதளப்பழச்சாறு பலம் 4 இது எல்லாம் கூட்டி பாகு பதமாக காச்சி அதில் ஏலம் லவங்கபட்டை லவங்கபத்திரி சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் தானிக்காய் நெல்லிமுள்ளி வாய்விளங்கம் கொடிவேலிவேர் கருஞ்சீரகம் வகைகு ஒன்றுக்கு களஞ்சி ஆ 3 வீதம் பொடி பண்ணிப் போட்டு கிண்டி உருக்கு நெய் விட்டு கிண்டி வச்சிக் கொண்டு தினம் மூன்று களஞ்சு சாப்பிடவும். அக்கினிமந்தம் அரோசியும் ஜக்கம் அஜீரணத்துக்கு அவசகாசம் யாவுமெல்லாம் தீரும் இச்சா பத்தியம்

சாம்புராணி

சாம்புராணி பலம் 2 கொண்டு அந்து பொடி பண்ணி கல்வத்தியலிட்டு கலயத்து ஆயக்கா கருதாசிகுல்லா போலே பண்ணி கலயத்து வாயால் காத்து போகமல் கட்டி அடுப்பில் கலயம் வைத்து விளக்கு கலயத்தியால் வைத்து விளக்கெரிக்க ரெண்டு ~~கலயம்~~ நாழிகை எரித்து கலயம் ஆறவிட்டு அவிழ்த்து பார்த்தால் சத்து எல்லாம் ஒருங்கும் நோய் சன்னிக்கு தேளடவும் தீரும்.

120.அ

வயத்து கொண்டைக்கு

பப்பாளிப்பழம் செங்காயா கொண்டுவந்து தோலும் விரையும் தள்ளி ஒலை போலே சீவி ஒரு கலசத்திலே போட்டு அதிலே பாதி உப்பு போட்டு மேல் சீலைப் போட்டு குழியிலே எட்டு நாளைக்கு புதைச்சு வைத்து எடுத்து கொட்டைப்பாக்கு பிரமாணம் கொள்ளவும். அசைவ கொண்டை பெருவயறு தீரும் புகையிலை தள்ளவும்

இரும்பு உருக்க

இரும்பை குகையில் வைத்து கோட்டாமணக்கு பாலிலே மூணு நாளைக்கு ஊரவச்சு உருக்க தண்ணி போலே உருகி வரும்.

அ

தாது புஷ்டிக்கு

செஞ்சிறைவேர்ப் பட்டை சாதிக்காய் ரெண்டும் சமனாய் சேர்த்து அரைத்து கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி காலமே அரைக்கால் படி பசுவின் பாலிலே குடிக்கவும் 70 வயது சென்ற பேருக்கும் தாது புஷ்டி உண்டாகும்.

இஞ்சி லேகியம்

இஞ்சி கொண்டு வந்து தோல்
போக்கி பலம் 10, எலுமிச்சம் பழச்சாறு விட்டு சந்தனம்
போல் அரைத்துக் கொண்டு சீரகம், மிளகு, ஏலம், திப்பிலி,
அதிமதுரம், கொத்தமல்லி, வாலுளுவை, தாளிசபத்திரி,
கடுகு, சித்திரமூலம், கற்கடகசிங்கி, கோரோசனை, ஓமம்
இதுவெல்லாம் வகைக்கு பலம் கி இதுவெல்லாம் ஆவாரம்
பட்டைச் சாத்தில் அரைத்து மாரண்டைக் கொண்டு
12: அவித்து கண்ட கண்டமாய் நறுக்கி மேலாயாரப்
போட்டு அதின் கூட கல்உப்பு அரைசேர் கூடப்
போட்டு மூனுநாள் ஊறின பிறகு எடுத்து வெயில்
காயப் போட்டு தூள் பண்ணிக் கொண்டு முன்
மருந்தெல்லாம் ஒன்றாய் கூடச் சேர்த்துக் கொண்டு
சீனி சர்க்கரை பலம் 4 போட்டு நெய் விட்டு
கிண்டி வைத்துக் கொண்டு அந்தி சந்தி ரெண்டு
நேரமும் ஒரு கொட்டை பாக்களவு சாப்பிடவும்
தீரும் வியாதி.

பித்தவாய்வு, உஷ்ணகாந்தி, பிசுட்டல்,
சந்துவலி, குன்மம், அசீரணம், வாய்வு வாதம்,
உப்பசம், பித்த குன்மம், அசத்திசாரம், சன்னிதோஷம்,
உஷ்ணம் எரிகுன்மம், அசீரணம் வாய்வு இது
எல்லாம் தீரும். பத்தியம் கரப்பான் பண்டம் தள்ளவும்
நெய் பால் வெள்ளாட்டு கறி கூட்டவும்.

ஆ

கடுக்காய் லேகியம்

கடுக்காய் கொட்டை தோல் போக்கியபலம் 10 சிவதைவேர் கருசாலை ஆவாரை, புளியாரை, நிலவாவாரை இது வகைக்கு பலம் 2 இது எல்லாம் இடித்து சூரணம் செய்து கருகுரோகணி கிராம்பு திப்பிலி சிறுநாகப்பூ வாயுவிளங்கம் கற்கடகசிங்கி கருஞ்சீரகம் மிளகு ஜாதிக்காய் கொத்தமல்லி தாளிசபத்திரி வகைக்கு பலம் 1 இது வெல்லாம் பொடித்து முன் மருந்தில் கலந்து ஆவின்நெய் சீனி சர்க்கரையும் போட்டு பதித்து சாப்பிடவும்

தீரும் வியாதி:

122 சலகட்டு, மலகட்டு கோளைகட்டு, உதர வாய்வு, மேககாந்தி, கால்கை எரிவு குடைச்சல், மாரடைப்பு, சூலத்தின் சூடு, மூலம், கிருமி புகைச்சல், சோகை இது எல்லாம் தீரும்

சன்னிக்கு தயிலம்

இஞ்சிச்சாறு படி க மிளகு படி உ கருகுரோகணி படி உ எலுமிச்சம்பழச் சாறு படி க நல்லெண்ணெய் படி ரு, இந்த சாறத்தில் மருந்தை அரைத்துப் போட்டு மெழுகு பதத்தில் வடித்து சுருக்கவும் சன்னி தீரும். கை கண்டது.

கும்பமுனி வண்ணம்

சித்திரமூலத்தின் மூலம்

மேத்தாகியும் உணாந்து சத்தாகியும் கசாயம்
வைத்தாகியும் குமக்க ரெத்தமோடு சீதமும் பெருந்த
தொகு மேல் வயறு அசத்திசுரம் நாகமோடு யாந்தனா
ஆ நோய் யேகவரும் நிலவாகை பெறுரைக்கல் மனல்
போடே உளது வயர் சூலை வாய்வு குலைந்து அமபபறம்
போல் சுழுண்டு வேம்பு மாத்தயே யகத்தி வாடுமே
கரிசாலை கன்னமொது மாயசு வதியமுண்டாம்
தொயாத கண் வாலங்கும் தாயாது பாண்டுமேல் குவாரை
மேகம் அகற்றுமே. சங்குடைய வேர் பொடியை உங்க
வதில் மேகமெல்லாம் யாங்கிதமாய் போகுமென்று
மங்கைபாகனாருரைத்தார் தருதாளைவேர் சமூலம்
வரமாமலே கொணர்ந்து நருவாம்லேயரைத்து வரு
12.3 தொடவே உண்ணவே சித்தமதில் வாதமெல்லாம்
அ மெத்த ஆதி சூலைகளும் சத்து நிலையாதே யோடுமே
வாத்தகமா அஞ்சுமுட கொத்தானும் வேர் சமூலம்
மெத்தாகவே யெடுத்து வாசத்தாற்மாயரைத்து உத்தாக
வே யுண்ணவே கட்டுகள் மலத்தில் சீதம் வாட்டுவதும்
இருப்பால் கட்டு திட்டம் தாய செயலாகுமே. மிக்கான
வெள்ளைதலை அக்காவே யுலர்த்தி சக்காமலே யரைத்து
வக்காமலே யருந்த வயிறுதும் பேதிகளும் அயபாக
-வே சுரங்கள் தயவாகவே அடக்குமே. நயமான
ஆதண்டைதலைவாலை அகற்றுமே

ஆ

மேகத்துக்கு படித்தெண்ணை

நல்லெண்ணை படி 1

சுயமச்சம் படிச்சாற் படி 1 கோளையாவாரைச்சாற்படி 1
வெங்காரம் பலம் வ வெள்ளை குங்கிலியம் பலம் வ
சீனிக்காரம் பலம் - வ கருஞ்சீரகம் பலம் - வ
சித்திரமூலம் பலம் வ கடுக்காய் தோல் பலம் கி
தானிக்காயத் தோல் பலம் - கி சுக்கு பலம் வ
மிளகு பலம் வ திப்பிலி பலம் வ அதிமதுரம் பலம் வ
களிப்பாக்கு பலம் வ கிராம்பு பலம் வ சீரகம் பலம் வ
சாதிக்காய் வராகனிடை 3 அத்தம் வராகனிடை 1 கி
துருசு வராகனிடை 4 கி, நெல்லிக்காய் கெந்தகம்
வராகனிடை 6 உளசிகாந்தம் வராகனிடை 4 கி
ரசம் வராகனிடை 3 வைத்திலைச்சார் விட்டு மெதிக்கவும்

124அ யிந்த மருந்தெல்லாம் அரைத்து எண்ணையிற் கூடப்
போட்டு அடுப்பேத்தி எரித்து பதத்தில் வடித்து
வைத்துக் கொண்டு நேர்வாளம் சுத்தி செய்தது பலம் 4
அரைத்து கூடப் போட்டு எண்ணையில் போட்டு
காச்சவும். இந்த எண்ணையை ஒரு கரண்டி குடிக்கவும்
தீரும் வியாதி :

சூதகவாய்க்கு 10 நாளைக்கு ஒரு தரம் யிப்படி
3 முறை குடிக்கவும், வெள்ளை வெண்குட்டம் கருங்குட்டம்
கைகால் கருப்பு வெள்ளைப் படலம் மகுத்தாள் சூசகிசல்
கட்டு துர்க்கட்டு மேகம் 21 பித்த வியாதியெல்லாம் தீரும்
ஆபத்தியம் வாயு பதார்த்தம் ஆகாது புசுங்கலரிச்சாதம்
சாப்பிடவும் பேதி உபாயமானால் தயிரும் சாதமும் சாப்பிடவும்
தெங்காயப் கூட்டு அதில் நிக்காமல் போனால் கருப்புக்கிலை
மாதை பார்க்கவும்

மாந்த களைச்சலுக்கு

கோரோசினை களிபாக்கு

சிரகம் தாளிகட்டி சமன்கூட்டி பசுச்சாந்தில்லரைத்து களிபாக்கு அளவு முலைப்பாலில் கலக்கி குடுக்கவும் களைச்சல் அடைடாகும்.

நல்வேளையும் வசம்புடம்

வெள்ளுள்ளியும் நய்ய நாக்கி வெச்சுசோடு கொண்டு கசக்கி பிழிந்து பாலை பருவத்துக்கு தக்கதைய் குடுக்கவும் வலிப்பு பலதிட்டு குணமாகும்.

எள்வெல்காயம் முடகொத்தானி யிலை வெச்சோடு கொண்டு ரெண்டு மூன்று காசிடை குடுக்கவும்

மாந்ததோசத்துக்கு

சிறுபுள்ளடி வசம்பு

வெள்ளுள்ளி, கலக்கொவ்வையிலையும் பிள்ளையோட உச்சியில் பிடித்த மருந்தை ரெண்டு மூறு குளிகையாய யாபத்துண்ணியல் கட்டி முழந்து மறுதுக்கும் கட்டவும்

மாந்தகுளிகை

திரிகடுகு, ஓமம், வெள்ளுள்ளி,

காயம் கருஞ்சீரகம் அக்கரகம்பு, வசம்பு வகை -க்கு ரொடை 2, கடுக்காய் 15 சாறணை வேர் அரைக்கண்ணு

பொடுதலைக் கொழுந்து துள்ளிக் காயளவு பெரு
தும்பை கொழுந்து வேலிப் பருத்தியிலை கிருவெல்லம்
வெதிப்பா ஒன்றாய் பரந்து பொடுதலை பெருதும்பை
சார் ஆட்டரைத்து அன்னடை காயளவு உருண்டை
செய்து நிழலுலர்த்திக் கொண்டு ~~அன்னடை காயளவு~~
பிள்ளை பருவத்துக்கு தக்கதாய் ஒரு குளிகை அரை
குளிகை முக்கால் குளிகை கால் குளிகை வெந்நீரில்
கொடுக்கவும். மாந்தக்கட்டு மாந்தக் காய்ச்சல் யாவும்
எல்லாம் தீரும்.

மாந்தத்துக்கு

வேலிப் பருத்திச் சார் அவுன்ஸ்
வசம்பு கோரோசனை திரிகடுகு வராகனிடை 2
வேப்பம் கொழுந்தும் அரைத்து சாற்றில் கொடுக்கவும்
மாந்தம் வயறுவலி வயறுதல் சேமியா குணம் சித்திம்

——— ௰ ———

பொருளடக்கம்	பக்கம்

பொருள் அடக்கம்

பொருள் அடக்கம்	பக்கம்

பொருளடக்கம் | பக்கம்